நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

11 June 2016

2016

தரம் : இடைநிலை உயர்நிலைப் பிரவு (ஆண்டு 9, 10)
Level : Intermediate Upper (Year 9 & 10)

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள் (வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)
Time Given : 70 Minutes (Including 10 minutes of reading time)

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

## வினாக்கள்: 1 - 5

### தரப்பட்ட உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தருக.

ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியத் தேசிய விடுதலைக்காகவும் சமத்துவ உரிமைக்காகவும் போராட்டங்கள் தொடங்கிய காலத்திலே ஏனைய பல சமூகங்களில் இருந்ததைப் போலவே தமிழ்ச் சமூகத்திலும் பெண்களின் நிலை கவலைக்குரியதாக இருந்தது. அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. பெண்கள் படிப்பதற்கோ பயன்தரு தொழில்களைச் செய்வதற்கோ சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. வீட்டையும் கணவனையும் பிள்ளைகளையும் பேணுவது மட்டுமே அவர்கள் தொழிலென்று கருதப்பட்டது. பாலிய விவாகம் என்னும் பொம்மைத் திருமணப் பந்தத்தினுள்ளே சிறுமியர் வலிந்து நுழைக்கப்பட்டனர். கைம்பெண்கள் வேண்டாதவர்களாகவும் தீண்டாதவர்களாகவும் நடத்தப்பட்டனர். விதவை விவாகம் தடுக்கப்பட்டது. பொதுவாக பெண்கள் அடிமைகளாகவே மதிக்கப்பட்டனர்.

பெண்கள் வாழ்வில் இருள் சூழ்ந்திருந்த இக்கால கட்டத்திலேதான் ஒளி வீசும் நிலவாக மகாகவி பாரதி தோன்றினார். மக்களின் நீடுதுயில் நீக்கப் பாடிவந்த பாரதி தன் பாட்டுத்திறத்தாலே பெண்களுக்குப் பெருமையைத் தேடித் தந்தார். அல்லற்பட்டு ஆற்றாது அழுது நின்ற பெண்களுக்கு விடுதலை தேடித்தருவதை நோக்கமாகக் கொண்டு பல பாடல்களைப் பாடினார்.

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்” என்ற பாரதியின் சிந்தனை, பெண்களின் உரிமைக் குரலுக்கான தாரக மந்திரமாக அமைந்தது. அச்சிந்தனையின் பேறாகப் பெண்கள் இழிவு செய்யப்படக் கூடியவர்கள் அல்லர் என்பது வற்புறுத்தப்பட்டது. “பெண்கள் நாட்டின் கண்கள்” என்ற எண்ணத்தை அது தோற்றுவித்தது.

மாதர்களின் அறிவைக் கெடுத்து அவர்களைப் பேசாமடந்தைகளாக ஆக்கிய மூடர்களை அவர் சாடினார். பாரதியின் ஆர்ப்பரிப்பு நியாயமானது. ஏனெனில் இறைவனுடைய படைப்பிலே ஆண்களைப் போன்றே பெண்களும் அறிவு படைத்தவர்கள் என்பது உண்மையன்றோ?

நாட்டுச் சுதந்திரம் மட்டுமன்றி வீட்டுச் சுதந்திரமும் வேண்டுமென்றே பாடினார். பெண்கள் படிப்பதும் வெளியே செல்வதும் பாவமென்ற கருத்தினைப் பாரதியார் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அவர் “ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார், வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்” என்று பாடி பாவையரின் அடிமைத்தளை நீங்கக் குரல் கொடுத்தார்.

1. தரப்பட்ட பகுதியில்:
   a) நாட்டின் விடுதலை பற்றிக் கூறப்பட்டுள்ளது.
   b) பெண்களின் உரிமை பற்றிக் கூறப்பட்டுள்ளது.
   c) மாணவர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
   d) ஆங்கிலேயரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

2. பெண்களின் முக்கியமான கடமைகள் எவை எனக் கருதப்பட்டன?
   a) கணவனைப் பேணுவது
   b) வீட்டைப் பேணுவது
   c) பிள்ளைகளைப் பேணுவது
   d) மேற்கூறப்பட்ட யாவும்

3. மாதர் என்ற சொல்லுக்கு ஒத்த சொல்:
   a) ஆடவர்
   b) பெண்கள்
   c) மக்கள்
   d) மானிடர்

4. ‘விதவை’ என்பவள்
   a) கணவனை இழந்தவள்
   b) குழந்தைகளை இழந்தவள்
   c) பெற்றோரை இழந்தவள்
   d) நண்பர்களை இழந்தவள்

5. ‘என்று தணியும் இந்த சுதந்திர தாகம்’ என்ற பாடலைப் பாடியவர்:
   a) கவிஞர் காசி ஆனந்தன்
   b) கவிஞர் புதுவை இரத்தினதுரை
   c) மகாகவி சுப்பிரமணிய பாரதியார்
   d) கவிப்பேரரசு வைரமுத்து

**வினாக்கள்: 6 - 10**

**பின்வரும் பாடலினை வாசித்து அதன் கீழ் காணப்படும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

குழந்தையின் சிரிப்பில் நெஞ்சம்
குழையலாம் புலரிப் போதில்
விழும் பனித் துளியில் புல்லின்
விளிம்பினில் தரையில் குந்தி
எழும் சிறு புள்ளின் வண்ண
இறக்கையின் துடிப்பில் நெஞ்சம்
தளம்பலாம் அவற்றில் இன்பத்
தனிச் சுவை காணலாமே
இயற்கையின் அசைவு தோறும்
இன்பத்தை நுகரலாம் விண்
வயல்களில் உலக வாழ்வின்
மறைபொருள் தெளியலாம் நம்
அயலவர் துயரில் பங்கம்
அடையலாம் எனிலோ, வாழ்வில்
கயமைகள் கழிய நாமோர்
காவியம் பாடலாமே

எம். ஏ. நு.ஃமான்
“அழியா நிழல்கள்”

6. குழந்தையின் சிரிப்பில் கவிஞர் எதனைக் காண்கிறார்?
   a) துக்கம்
   b) அழுகை
   c) பேரானந்தம்
   d) நெஞ்சம் குழைதல்

7. எவ்வெவற்றில் நெஞ்சம் தளம்பலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது?
   a) விழும்பனித் துளியில்; புல்லின் விளிம்பினில்
   b) மழையின் அழகில் ; நிழலின் வடிவத்தில்
   c) காற்றின் அசைவில் ; அலையின் ஓசையில்
   d) மலரின் நறுமணத்தில் ; தென்றலின் வருடலில்

8. "இயற்கையின் அசைவு தோறும்" எதனை நுகரலாம்?
   a) இன்ப துன்பத்தை
   b) பழைய நினைவுகளை
   c) கற்பனை கதைகளை
   d) இன்பத்தினை

9. "நம் அயலவர் துயரில் பங்கும் அடையலாம்" என்பதில் கவிஞர் கூற வருவது யாது?
   a) அயலவர் துன்பத்தினை காணாது விடல்
   b) அயலவர் துன்பத்தினை கண்டும் பேசாது இருத்தல்
   c) அயலவர் துன்பத்தில் பங்கு கொள்ளல்
   d) இவை யாவும் சரி

10. "சிறு புள்ளின் வண்ண இறக்கையின் துடிப்பில்...." என்ற கவி வரியில் "புள்" என்பதன் பொருள் யாது?
   a) சிறகுகள்
   b) இறக்கை
   c) பறவை
   d) யாவும் சரி

**வினாக்கள் 11 - 15**

**இடைவெளிகளில் கீழுள்ள இணைமொழிகளில் பொருத்தமானவற்றை வைத்து எழுதுக.**

a) ஆற அமர, b) எலும்பும் தோலும், c) அக்கம் பக்கம்,
d) காரசாரமான, e) பட்டம் பதவி

11. பகலில் .................................... பார்த்துப் பேசு, இரவில் அவ்வாறும் பேசாதே.

12. நாம் எக்காரியத்தையும் செய்யும் முன்னர் .................................... நன்கு சிந்தித்துச் செய்வதே நல்லது.

13. .................................. பல கிடைத்தாலும் பண்பாகவும் எளிமையாகவும் வாழ்வதே பெரியோர்க்கு அழகாகும்.

14. எத்தியோப்பியாவில் வாழும் மக்கள் வறுமையின் கொடுமையால் .................................. ஆக இருக்கின்றனர்.

15. அவர்கள் இருவருக்கும் இடையில் .................................. விவாதம் நடந்தது.

**வினாக்கள் 16 - 20**

**பின்வரும் வாக்கியங்களில் தவறாக எழுதப்பட்ட சொல் எது?**

16. மாதவி ஆடற்கலையில் சிரந்து விளங்கினாள்.
 a) விளங்கினாள்
 b) சிரந்து
 c) கலையில்
 d) மாதவி

17. காலவேகம் என்ர ஒரு யானை மதம் கொண்டு மக்கலை துரத்தியது.
 a) காலவேகம்
 b) மதம்கொண்டு
 c) மக்கலை
 d) துரத்தியது

18. இன்று அவசர அவசரமாய்ப் பரந்தடித்துக் கொண்டு ஓடித் திரிந்தால் அதுதான் நாகரிகமாம்.
 a) அவசர அவசரமாய்
 b) பரந்தடித்து
 c) திரிந்தால்
 d) யாவும் பிழை

19. குமார் ஆசனப் பழகையில் நேராக அமர்ந்து வந்தான்.
 a) ஆசனப் பழகை
 b) நேராக
 c) அமர்ந்து
 d) வந்தான்

20. வறுமை எனும் வெயிலால் வாடுகின்ற மக்களாகிய பயிர்களுக்குப் பொருலாகிய மழையை தருகின்ற வள்ளல் வாழ்க.
 a) பொருலாகிய
 b) வள்ளல்
 c) வெயில்
 d) வறுமை

**வினாக்கள் 21 - 25**

**பின்வரும் இலக்கியப் பாத்திரப் படைப்புகளைத் தொடர்புபடுத்துக.**

a) மகாபாரதம்
b) சிலப்பதிகாரம்
c) நளவெண்பா
d) கம்பராமாயணம்

21. கண்ணகி ....................

22. திரிசடை ....................

23. தமயந்தி ....................

24. கர்ணன் ....................

25. சூர்ப்பனகை ....................

**வினாக்கள் 26 - 28**

**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

a) மகாகவி பாரதியார்
b) ஔவையார்
c) பாவேந்தர் பாரதிதாசன்

26. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும். ....................

27. அறம் செய்ய விரும்பு ஆறுவது சினம். ....................

28. வீட்டுக்குள் பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். ....................

**வினாக்கள் 29 - 31**

**பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தருக.**

29. email ....................

30. Face book ....................

31. Social media ....................

**வினாக்கள் 32 - 34**

**பின்வரும் பழமொழிகளைப் பொருத்தமான சொல் கொண்டு பூரணப்படுத்துக.**

a) போல்   b) ஆயுள்   c) ஆயுதம்   d) பூரணமடைகிறான்

32. வல்லவனுக்கு புல்லும் ……………………………………..

33. சாமைச் சோறு ஆமை ……………………………………

34. வாசிப்பதனால் மனிதன் …………………………………..

**வினாக்கள்: 35 - 40**

35. வயலும் வயல் சார்ந்த பிரதேசம் என்பது:
   a) பாலை
   b) குறிஞ்சி
   c) மருதம்
   d) நெய்தல்

36. முக்கனிகள் எனச் சொல்லப்படுபவை
   a) மா, பலா, வாழை
   b) மா, திராட்சை, வாழை
   c) வாழை, கொய்யா, மா
   d) யாவும் சரி

37. ஐம்பெருங்காப்பியங்கள் எனப்படுபவை:
   a) கம்பராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை, நளவெண்பா
   b) சூளாமணி, நீலகேசி, கம்பராமாயணம், மகாபாரதம், நளவெண்பா
   c) சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, நீலகேசி, சூளாமணி
   d) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி

38. அன்னப் பறவையினை தூது அனுப்புகின்ற கதைப் பகுதி இடம் பெற்ற இலக்கியம்
   a) மூவருலா
   b) நளவெண்பா
   c) சாகுந்தலம்
   d) இராமாயணம்

39. பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் நறுமணம் உண்டா இல்லையா என்ற விவாதம் எந்த மன்னனின் அவையில் இடம் பெற்றது.
   a) சேரன்
   b) சோழன்
   c) பாண்டியன்
   d) யாவும் சரி

40. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பதன் கருத்து:
   a) நன்மையும் தீமையும் மற்றவர்களே தருவர்
   b) நன்மையும் தீமையும் பிறர் தருவர்
   c) தீமையும் நன்மையும் யாரும் தருவதில்லை
   d) யாவும் சரி

**41. எழுத்து ஆக்கம் - பின்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களில் எழுதுக.**

“நவீன உலகில் உலா வருகின்ற பாரதி கண்ட புதுமைப் பெண்கள்” என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினை எழுதுக.

அல்லது

“புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழியினை வளர்த்தெடுக்கும் கடமை இளையோர் கைகளில் உள்ளது” என்ற தலைப்பில் இளையோர் மத்தியில் பேசவுள்ளீர். அவர்களைத் தூண்டும் வகையில் பேச்சு ஒன்றினை எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2016